நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 187/2021
அரசு தரப்புக்காக அ. சா.6 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.வள்ளி, காவல் ஆய்வாளர் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 16 | | | |

1 முதல் 3 எதிரி ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on
15th day of October 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.04)

நான் தற்போது நெய்வேலி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 23.06.2021 அன்று நான் பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பொறுப்பேற்றபோது காவல் ஆய்வாளர் திருமதி.ராதிகா அவர்கள் பதிவு செய்த குற்ற எண்.13/2021 என்ற முதல் தகவல் அறிக்கை சம்மந்தப்பட்ட வழக்கு கோப்பினை தொடர்புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே வழக்கு கோப்பினை பார்வையிட்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு விசாரணை செய்தேன். சாட்சிகளையும் அன்றே விசாரணை செய்தேன். ஏற்கனவே முந்தைய ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் உள்ளது போலவே சம்பவ இடம் அமைந்திருந்ததால் நான் தனியாக பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்தேன். பாதிக்கப்பட்ட பெண்/அ.சா.1, ஜெயந்தி, சிவா என்கிற சுப்ரமணி, மணி, சுனில்குமார்,

ராஜேந்திரன், குப்புசாமி ஆகியோர் முந்தைய ஆய்வாளரிடம் சொன்னதுபோலவே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை .03.07.2021 ஆம் தேதி மூன்று எதிரிகளுக்கும் மருத்தவ பரிசோதனை செய்ய பண்ருட்டி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் தலைமைக் காவலர் 328 திருமதி.லூர்துமேரி, முதல்நிலைக் காவலர் 1503 திருமதி.பூரணி, முதல்நிலைக் காவலர் 1377 திரு.மாயவேல், முதல்நிலைக் காவலர் 500 திரு.கேசவபெருமாள் ஆகியோர்களை நியமித்து வேண்டுகோள் கடிதம் கொடுத்து அன்றைய தினமே எதிரிகள் மூவரையும் கடலூர் மத்திய சிறையில் இருந்து அழைத்து வரப்பட்டு கடலூர், அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை முடிக்கப்பட்டது. 04.07.2021 ஆம் தேதி பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவ சான்று வழங்கிய டாக்டர்.சுகந்தி அரசு தலைமை மருத்துவமனை, கடலூர் என்பவரை விசாரணை செய்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்து சான்று வழங்கிய மருத்துவர்.வினோத் என்பவரை விசாரணை செய்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (முதல் எதிரி சம்மந்தப்பட்ட ஆண்மை தன்மை மருத்துவ சான்றிதழ் **அ.த.சா.ஆ.6** ஆகவும் 2–வது எதிரி சம்மந்தப்பட்ட ஆண்மை தன்மை மருத்துவ சான்றிதழ் **அ.த.சா.ஆ.7** ஆகவும் 3–வது எதிரி சம்மந்தப்பட்ட ஆண்மை தன்மை மருத்துவ சான்றிதழ் **அ.த.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனைக்காக அழைத்து சென்ற தலைமைக் காவலர் 321 திருமதி.நிர்மலா என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகளுக்கு மருத்துவ பரிசோதனைக்கு ஆஜர் செய்த காவலர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.07.2021 ஆம் தேதி டிடிபி அவர்களின் மாதிரி அறிக்கை பெறப்பட்டு இவ்வழக்கின் சட்டப்பிரிவை 451, 328, 376(2)(h), 376 r/w 114 இ.த.ச வில் இருந்து 450, 328, 376 r/w 114 இ.த.ச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது). வழக்கில் அனைத்து விசாரணைகளையும் முடித்து 1வது எதிரி மீது 328, 376 r/w 114 இ.த.ச படியும் 2 மற்றும் 3 வது எதிரிகளின் மீது 450, 376 இ.த.ச படியும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஏற்கனவே புலன் விசாரணை செய்த ஆய்வாளர் விசாரணை செய்த சாட்சிகளை மட்டுமே நான் விசாரணை செய்தேன் என்றும் வேறு புதிய

சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை என்றும் கேட்டால் மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட நபர்களை மட்டும் விசாரித்தேன். நான் விசாரணை செய்யும் சமயத்தில் பாதிக்கப்பட்ட பெண் 1–வது எதிரியுடன் ஏற்பட்ட திருமணத்தை தவிர்த்து 2–வதாக திருமணம் செய்துகொண்டார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் என்னுடைய விசாரணையில் தெரியவரவில்லை. சம்பவம் நடந்த சமயம் கொரோனா காலம் என்பதால் 1வது எதிரியின் வீட்டருகே பேரி கார்டு அமைக்கப்பட்டு இருந்ததா என்றால் சரியாக தெரியவரவில்லை. பாதிக்கப்பட்ட பெண் 1வது எதிரியிடம் பாகப்பிரிவினை கேட்டு 1வது எதிரி மறுத்ததற்கு பிறகு தான் புகார் கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியவந்ததா என்றால் அதுபற்றி விசாரணையில் தெரியவரவில்லை. பாதிக்கப்பட்ட பெண் 1–வது எதிரியின் உடைய முழு சொத்தையும் தனக்கு கொடுக்கவில்லை என்றால் தான் வேறு திருமணம் செய்து கொள்வேன் என்று 1–வது எதிரியிடம் சொல்லியுள்ளார் என்பது பற்றி எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியவரவில்லை. முதல் எதிரி மீது பொய்யாக கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல்இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.த.சா.ஆ.3 பாதிக்கப்பட்ட பெண்ணின் மருத்துவ அறிக்கையின் முதல் பக்கத்தில் Compliants of the Victim என்ற பகுதியில் Unknown என்பது Known என்று மாற்றப்பட்டுள்ளதா என்றால் Known என்று எழுதப்பட்டது. K என்பது U என்பதற்கு மேலே எழுதப்பட்டுள்ளது. வழக்கின் வரலாறு அ.சா.1 ஆல் சொல்லப்பட்டவை அல்ல என்றும் நான் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் கொடுத்துள்ள சங்கதிகளை தான் வழக்கின் வரலாறாக மருத்துவரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டின் அருகே உள்ளவர்களை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பண்ருட்டி டிஎஸ்பி ஆல் பெறப்பட்ட முதல் தகவலும் அவரால் செய்யப்பட்ட முதல் விசாரணையும் இவ்வழக்கில் மறைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சியின் வாக்குமூலங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 முதல் எதிரியின் முழு வீட்டையும் தனது பெயரில் எழுதிகேட்டு 1–வது எதிரி மறுத்ததால் ஏற்பட்ட பிரச்சனையில் 2, 3 எதிரிகள் 1–வது எதிரிக்கு ஆதரவாக வந்ததால் 2, 3 எதிரிகள் இவ்வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் இந்த

வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 03.32 )

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.